DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT, NAMAKKAL.

CC. No. 387/2025

PW – 4

| | | |
|---|---|---|
| Name | : | கருப்புசாமி ( LW. 3 ) |
| Father's / Husband Name | : | த/பெ.பெரியய்யா |
| Village | : | சிலுவங்கரையூர் |
| Taluk | : | நத்தம் |
| Calling | : | சமையல் மாஸ்டர் |
| Age | : | 28 |

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the day of 04.08.2026 தேதியில் திரு.துரைகருணாநிதி, உதவியாளர் ஆகிய என்னால் சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

**(எதிரி ஆஜர்.)**

**முன் விசாரணை:–**

1) நான் தற்போது மேற்சொன்ன முகவரியில் குடியிருந்து சமையல் மாஸ்டர் வேலை செய்து வருகிறேன். கடந்த 08.06.2025 ம் தேதி காலை 08.15 மணியளவில் நான் பாரத் பாலிடெக்னிக் கல்லூரிக்குள் சமையல் வேலை செய்து கொண்டிருந்தேன். அப்போது அருகில் உள்ள காட்டுக்காரர்கள் வாகன விபத்து ஏற்பட்டதாக தகவல் தெரிவித்தார்கள். நான் சென்று பார்த்தபோது ஆம்னி காரும், பேசன் புரோ இருச்சக்கர வாகனமும் மோதி விபத்து ஏற்பட்டிருந்தது.அதில் என்னுடன் பணியாற்றி வந்த வீரண்ணன் என்பவரும் காயம் ஏற்பட்டிருந்தது. நானும், செல்வம், தமிழ்செல்வி ஆகியோர் அடிப்பட்ட வீரண்ணன் என்பவரை ஆம்புலன்ஸ் மூலம் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். ஆம்னி காரை ஓட்டி வந்த நபரை நான் சம்பவயிடத்தில் பார்க்கவில்லை. ஆம்னி காரை ஓட்டி வந்த நபர் யார் என்று எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை –**

2) நான் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை.

**மறு விசாரணை – இல்லை.**

DINESHKUMAR SUBRAMANI

Digitally signed by DINESHKUMAR SUBRAMANI
Date: 2026.08.04 18:42:53 +0530

**நீதித்துறை நடுவர் எண்.1**
**நாமக்கல்.**

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT, NAMAKKAL.

CC. No. 387/2025

PW – 5

| | | |
|---|---|---|
| Name | : | தமிழ்செல்வி ( LW.7) |
| Father's / Husband Name | : | க/பெ.செல்வம் |
| Village | : | கிடாரிபட்டி |
| Taluk | : | மேலூர் |
| Calling | : | இல்லத்தரசி |
| Age | : | 33 |

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the day of 04.08.2026 தேதியில் திரு.துரைகருணாநிதி, உதவியாளர் ஆகிய என்னால் சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

**(எதிரி ஆஜர்.)**

**முன் விசாரணை:–**

1) நான் விபத்து நடந்த சமயத்தில் பாரத் பாலிடெக்னிக் கல்லூரிக்குள் இருந்த கேண்டீனில் வேலை செய்து வந்தேன். அக்கல்லூரிக்குள்ளேயே வசித்து வந்தேன். நான் தற்போது மேற்சொன்ன முகவரியில் குடியிருந்து இல்லத்தரசியாக இருந்து வருகிறேன். கடந்த 08.06.2025 ம் தேதி காலை 08.15 மணியளவில் எனது தந்தை எனது தந்தைக்கு சொந்தமான பேசன் புரோ இருச்சக்கர வாகனத்திற்கு பெட்ரோல் இட சென்றார். நீண்ட நேரம் ஆகியும் அவர் வர வில்லை. பின்னர் அருகில் உள்ள காட்டுக்காரர்கள் என் தந்தைக்கு வாகன விபத்து ஏற்பட்டதாக தகவல் தெரிவித்தார்கள். நான் சென்று பார்த்தபோது ஆம்னி காரும், பேசன் புரோ இருச்சக்கர வாகனமும் மோதி விபத்து ஏற்பட்டிருந்தது. பெட்ரோல் போட்டுவிட்டு கல்லூரிக்கு வர திரும்பும் போது விபத்து ஏற்பட்டதாக தெரிவித்தார்கள். அடிப்பட்ட எனது தந்தையை ஆம்புலன்ஸ் மூலம் மருத்துவமனைக்கு எடுத்து சென்றுவிட்டார்கள். நாமக்கல்லில் உள்ள CM Best மருத்துவமனையில் 3 நாட்கள் சிசிச்சையில் இருந்தார். சிகிச்சை பலனின்றி எனது தந்தை 10.06.2025 ம் தேதி இறந்துவிட்டார். ஆம்னி காரை ஓட்டி வந்த நபர் பொம்மம்பட்டியை சேர்ந்த சங்கர் என்று தெரிவித்தார்கள். ஆஜர் எதிரி தான்மேற்படி

விபத்து ஏற்படுத்திய வாகனத்தை ஓட்டி வந்த நபர் ஆவார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை –**

2) நான் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை. நான் விபத்து பற்றி கேள்விப்பட்டு சம்பவயிடம் வரும் போது என்னுடன் சக்தி கண்ணன் என்பவரும் வந்தார் என்றால் சரியல்ல. என் தந்தை இறந்தது தொடர்பாக இழப்பீடு கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளோம். வழக்கின் சாட்சிகளான கருப்பாயி எனது அம்மா ஆவார். கார்த்திக் எனது அண்ணன், செல்வம் எனது கணவர், பழனியம்மாள் எனது அண்ணன் மனைவி ஆவார். சக்தி கண்ணன், கருப்புசாமி, பாலாமணி, சரோஜா ஆகியோர்கள் உறவினர் அல்லர், உடன் வேலை செய்பவர்கள். விபத்தின் போது எனது தந்தை தலைக்கவசம் அணிந்திருந்தார். எனது தந்தைக்கு ஓட்டுநர் உரிமம் உள்ளதா என்றால் எனக்கு தெரியாது. என் அம்மா புகார் கொடுத்துள்ளதால் அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரி. எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் தொடர்பில்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை – இல்லை.**

DINESHKUMAR SUBRAMANI

Digitally signed by DINESHKUMAR SUBRAMANI
Date: 2026.08.04 18:43:06 +0530

நீதித்துறை நடுவர் எண்.1
நாமக்கல்.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT, NAMAKKAL.

CC. No. 387/2025

PW – 6

| | | |
|---|---|---|
| Name | : | செல்வம் ( LW.8 ) |
| Father's / Husband Name | : | த/பெ.சின்னபெரியான் |
| Village | : | மேலவளவு |
| Taluk | : | மேலூர் |
| Calling | : | சமையல் மாஸ்டர் |
| Age | : | 44 |

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the day of 04.08.2026 தேதியில் திரு.துரைகருணாநிதி, உதவியாளர் ஆகிய என்னால் சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

**(எதிரி ஆஜர்)**

**முன் விசாரணை:–**

1) நான் தற்போது மேற்சொன்ன முகவரியில் குடியிருந்து பாரத் பாலிடெக்னிக் கல்லூரி கேண்டீனில் சமையல் மாஸ்டர் வேலை செய்து வருகிறேன். விபத்தில் இறந்துபோன வீரண்ணன் எனது மாமனார் ஆவார். கடந்த 08.06.2025ம் தேதி காலை 08.15 மணியளவில் நான் கல்லூரிக்குள் வேலை செய்து கொண்டிருந்தபோது அருகில் உள்ள காட்டுக்காரர்கள் என் மாமனாருக்கு வாகன விபத்து ஏற்பட்டதாக தகவல் தெரிவித்தார்கள். நான் சென்று பார்த்தபோது ஆம்னி காரும், பேசன் புரோ இருச்சக்கர வாகனமும் மோதி விபத்து ஏற்பட்டிருந்தது. பேசன் புரோ இருச்சக்கர வாகனம் எனது மாமனாருக்கு சொந்தமான வாகனம் ஆகும். மேற்படி இருசக்கர வாகனத்திற்கு பெட்ரோல் போட்டுவிட்டு கல்லூரிக்கு திரும்பி வரும்போது விபத்து ஏற்பட்டது. அடிப்பட்ட என் மாமனாரை ஆம்புலன்ஸ் மூலம் மருத்துவமனைக்கு எடுத்து சென்றுவிட்டார்கள். நாமக்கல்லில் உள்ள CM Best மருத்துவமனையில் 3 நாட்கள் சிகிச்சையில் இருந்தார். சிகிச்சை பலனின்றி எனது தந்தை 10.06.2025 ம் தேதி இறந்துவிட்டார். பின்னர் நாமக்கல் அரசு மருத்துவமனையில் வைத்து அவருக்கு பிரேத பரிசோதனை செய்யப்பட்டது. பிரேத பரிசோதனையின் போது நான் உடனிருந்தேன்.

போலீசார் என்னை விசாரித்தார்கள். ஆம்னி காரை ஓட்டி வந்த நபர் பொம்மம்பட்டியை சேர்ந்த சங்கர் என்று தெரிவித்தார்கள். ஆஜர் எதிரி தான் மேற்படி விபத்து ஏற்படுத்திய வாகனத்தை ஓட்டி வந்த நபர் ஆவார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை –**

2) நான் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை. வாகனத்தை சாலையில் திருப்பும் போது இண்டிகேட்டர் போட்டுவிட்டு தான் திருப்ப வேண்டும் என்றால் சரி. எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் தொடர்பில்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை – இல்லை.**

DINESHKUMAR SUBRAMANI

Digitally signed by DINESHKUMAR SUBRAMANI
Date: 2026.08.04 18:43:18 +0530

நீதித்துறை நடுவர் எண்.1
நாமக்கல்.